எது பூஜை?



சுவாமி பஜனானந்தர்

எது பூஜை?

சுவாமி பஜனானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை 600 004

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

III-2M 3C-3-2003
ISBN 81-7120-878-9

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

பதிப்புரை

பூஜை என்பது இன்றைய இந்துமதத் துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றாகும். கோயில்களிலும், வீடுகளில் விசேஷ சடங்குகளின்போதும் பூஜைகள் செய்யப் படுவதை நாம் காண்கிறோம். பார்ப்பவர் களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது பூஜை.

அதேவேளையில் பூஜை செய்ப வருக்கு அதனால் ஏதாவது ஆன்மீக பலன் உண்டா, அதாவது பூஜை ஆன்மீக முன்னேற்றத்தைத் தருமா என்பது கேள்வி. பொதுவாக கோயில்களிலும் சரி, விசேஷ சடங்குகளிலும் சரி பூஜை செய்பவர்கள் இந்தக் கேள்வியைப்பற்றி கவலைப் படுவதில்லை. ஆன்மீக முன்னேற்றம் வேண்டுமானால் பூஜையை ஒரு சடங்காக மட்டுமின்றி ஓர் ஆன்மீக சாதனையாகவும் செய்ய வேண்டும்.

பூஜையை ஓர் ஆன்மீக சாதனையாக எவ்வாறு செய்வது, பூஜையின் தத்துவம் என்ன, பூஜை செய்வதற்கான நிபந்தனைகள்

எ2

எவை என்பது இந்த நூலில் விளக்கப் படுகிறது.

இதனை ஆங்கிலத்தில் எழுதியவர் எமது மடத்தின் மூத்தத் தவமிகு துறவி யருள் ஒருவரும் இணைச் செயலர்களுள் ஒருவருமான சுவாமி பஜனானந்தர். எமது கல்கத்தா கிளை மடத்தின் ஆங்கிலப் பத்திரிகையான Prabuddha Bharata-வின் ஆசிரியராக அவர் 1979 முதல் 1986 வரை பணியாற்றினார். அப்போது அவர் எழுதிய Worship as a Spiritual Discipline I & II (May & June 1980), Upasana and Transformation of Consciousness I & II (August & September 1981) ஆகிய தலையங்கக் கட்டுரைகள் மற்றும் Service As A way of Life என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்புத் தொகுப்பே இந்த நூல்.

இந்தக் கட்டுரைகளுக்கு நூல் வடிவம் கொடுப்பதற்காக கட்டுரைப் பகுதிகள் சில இடங்களில் இடமாற்றம் செய்யப்பட்டும், சில இடங்களில் சுருக்கப்பட்டும், சில இடங்களில் விரிக்கப்பட்டும் உள்ளது. இந்தப் பணிகளைச் செய்தவர் எமது மடத்தின் துறவியாகிய சுவாமி ஆசுதோஷானந்தர்.

சுவாமி பஜனானந்தரின் கருத்துக் களுக்கு தமிழ் மக்களிடையே சிறந்த

வரவேற்பு இருப்பதை ஏற்கனவே வெளிவந்த அவரது நூல்களின் விற்பனை நமக்குக் காட்டுவதாக உள்ளது. இந்த நூலும் பலருக்கு வழிகாட்டியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

1. 2. 2000

எது பூஜை?

ஆன்மீக வாழ்க்கையில் பூஜை

தியானத்தில் இறைவனுடன் ஒன்றுபடுவது ஆன்மீக வாழ்வின் மிகவுயர்ந்த அனுபூதியாகக் கூறப்படுகிறது. தீவிர சாதனைகள், கடின தவம் இறையருள் இவற்றின் வாயிலாக இந்த அனுபூதி கிடைக்கிறது. ஏதோ ஒருசில சாதகர்கள் மட்டுமே நேரடியாக இந்த நிலைக்குத் தகுதி பெறுகிறார்கள். மிகப் பெரும் பாலோர் ஆரம்பத்திலிருந்து படிப்படியாகச் செல்ல வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். இத்தகைய ஆரம்பப்படியாக வைக்கப்படுகிறது பிரார்த்தனை.

ஓர் உயர் உண்மையுடன் நாம் கொள்கின்ற தொடர்பே ஆன்மீக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது. சாதாரணமாக, உலகமும் அதிலுள்ள பொருட்களுமே நமக்கு உண்மையாக தெரிகின்றது. ஆனால் உலகின் உண்மையைவிட உயர்ந்ததோர் உண்மை இருப்பதையும், அந்த உண்மை தான் உலகை இயக்குகிறது என்பதையும் வாழ்க்கையின் அனுபவங்கள் நமக்குப் புரிய வைக்கிறது. அந்த உண்மைப் பொருளாகிய இறைவனுடன் தொடர்பு கொள்ள நினைப்பது இயல்பே. துல்லியமாக இல்லாமல், ஏதோ மங்கலாக மட்டும் உணர்ந்த அந்த இறைவனை நோக்கி கைகளைக் கூப்புகிறான் மனிதன். தனக்கு வழிகாட்டுமாறு, தனக்கு உண்மையை உணர்த்துமாறு அந்தப் பேருண்மை வடிவினனான இறைவனிடம் மனத்தைத் திறக்கிறான். இதுவே பிரார்த்தனை.[1]

பொதுவாக மனம் எதையும் பெறுகின்ற நிலையிலேயே இருக்கிறது. இதனால் தான் ஆன்மீக வாழ்வின் முதற்படியாக


1. பிரார்த்தனைபற்றி விரிவாக அறிய இதே நூலாசிரியரின் 'பிரார்த்தனை' (சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்து வெளியீடு) என்ற நூலைப் பார்க்கவும்.

பிரார்த்தனை உள்ளது. இந்தப் பிரார்த்தனையின் பலனாக இறைவனிடமிருந்து அவரது அருட்கிரணம் வருகிறது; நம்பிக்கை, அன்பு, மன உறுதி போன்ற வடிவங்களில் அது நம் மனத்தில் நிறைகிறது.

தகுதி வாய்ந்த சிலரது வாழ்வில் பிரார்த்தனையே தியானமாக நிறைவு பெறுவதுண்டு. ஆனால் பலருக்கு பிரார்த்தனைக்கும் தியானத்திற்கும் இடையில் ஒரு படி தேவைப்படுகிறது. அதுவே பூஜை.

பூஜை எவ்வாறு செயல்படுகிறது?

பிரார்த்தனைமூலம் நாம் இறைவனிடமிருந்து பெறுகிறோம்; அதனால் பக்குவப்பட்ட மனத்துடன் இறைவனுக்குக் கொடுக்கிறோம். இவ்வாறு பெறுவதும் கொடுப்பதும் தொடரும்போது நாம் மெல்ல மெல்ல இறைவனை நெருங்குகிறோம்;



தியான நிலை வாய்க்கிறது. தியான நிலை வடமொழியில் உபாசனா என்று அழைக்கப் படுகிறது. உபாசனா (உப+ஆஸனா) என்றால் அருகில் இருப்பது; இறைவனின் அருகில் இருப்பது.

இவ்வாறு பூஜை மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு சேர்க் கிறது; இறை தரிசனத்தை அளிக்கிறது.

பூஜையின் அடிப்படைகள்

1. தியாகம்

'தேவதா உத்தேசேன த்ரவ்ய த்யாக:'— தெய்வத்திற்காக ஒரு பொருளைத் தியாகம் செய்வது, அதாவது சமர்ப்பிப்பது பூஜை.

அது ஒரு மலராக இருக்கலாம், பண்ட மாக இருக்கலாம், மனமாக இருக்கலாம், செயலாக இருக்கலாம். எதுவாக இருந் தாலும் அதனைத் தியாகத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்; பிரார்த்தனையின்மூலம் பக்குவம் பெற்ற மனத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தியாகம் இல்லாமல் பூஜை இல்லை. வெறுமனே ஒன்றைக் கொடுப்பது தியாகம் ஆகாது. ஒரு செயல் தியாகம் ஆக வேண்டுமானால் அங்கே இரண்டு

நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்—

i. அன்பு. நாம் கொடுப்பது அன்பின் அடையாளமாக இருக்க வேண்டும்; கொடுக்கல்-வாங்கலாக இருக்கக் கூடாது.

ii. எதைக் கொடுக்கிறோம் என்பதை விட அதை எப்படிக் கொடுக்கிறோம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இலை, மலர், பழம், தண்ணீர் என்று எதுவாயினும் தாம் ஏற்றுக்கொள்வதாக பகவத்கீதையில் (9.26) பகவான் கூறுகிறார்; ஆனால் அது 'பக்தியுடன்' கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

பிரார்த்தனை என்ற படியின்மூலம் மனத்தைப் பக்குவப்படுத்தாமலும் தியாக உணர்வின்றியும் பூஜையில் ஈடுபடுவதால் தான் பூஜை என்பது வெறும் கிரியையாக ஆகிவிட்டது.

2. புனிதம்

பூஜையுடன் தொடர்புடைய அனைத்தும் புனிதமானதாகக் கருதப்பட வேண்டும். பூஜை செய்பவனுக்கும் பூஜைக்குரிய பொருட்களுக்கும் பூஜை என்ற செயலே புனிதத்தை அளிக்கிறது.

இந்து மதம் மூன்று விதமான புனிதத்தைப்பற்றி கூறுகிறது. முதலாவது ஆதிபௌதீகம்; பௌதீக நிலையில், அதாவது புறநிலையில் தூய்மை. பூஜை சம்பந்தப்பட்ட பொருட்கள்அனைத்தையும் மந்திரங்கள் ஓதி நீரால் தூய்மை செய்வது இது.

இரண்டாவதாக ஆதிதைவதம். ஒவ்வொரு பொருளுக்கும் உடம்பின் ஒவ்வோர் அங்கத்திற்கும் ஒரு தெய்வீக வடிவம் உண்டு; அவை ஒவ்வொன்றும் ஒரு தேவதையின்கீழ் உள்ளன. இந்த தேவதை அதிஷ்டான தேவதை எனப்படுகிறது. இந்த தேவதைகளை மணி, தீபம், சங்கு, பூக்கள், தண்ணீர் போன்றவற்றில் எழுந்தருளச் செய்வதன்மூலம் அந்தப் பொருட்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

மூன்றாவதாக ஆத்யாத்மிகம். மனிதனின் ஆன்மா என்றென்றும் தூய்மையானது, ஒளி நிறைந்தது. பாவமும் தோஷமும் எல்லாம் மனத்தை மட்டுமே பற்றுகின்றன. எனவே மனத்தைத் தூய்மைப் படுத்துவதன்மூலம் ஆன்மாவை அதன் சொந்த ஒளியுடனும் மகிமையுடனும் வெளிப்படச் செய்வது.

3. தெய்வீக உறவு

பூஜை செய்பவருக்கும் இஷ்ட தெய்வத்திற்கும் இடையில் ஓர் உறவு நிலவ வேண்டும். வெறும் கல் மண் சிலைகளுக்கு முன்போ படத்திற்கு முன்போ அமர்ந்து சில கிரியைகளைச் செய்வது மட்டும் பூஜை ஆகாது. அங்கே உண்மையான இறைவனைக் காண வேண்டும். அது முடியாத பட்சத்தில் உணர வேண்டும். அதுவும் முடியவில்லை என்றால் அங்கே இறைவன் இருப்பதாகக் கருத வேண்டும். அங்கே இருக்கின்ற அவருடன் பூஜை செய்பவன் ஒரு மாறாத உறவை, அன்பு பிணைப்பைக் கொள்ள வேண்டும்.

இது அவ்வளவு சுலபமான ஒரு காரியம் அல்ல. இதுவரை காணாத, அறிந்திராத ஒருவருடன் உறவு கொண்டாடுவது என்பது எளிதல்ல. இதற்கு தூய்மை வேண்டும், நம்பிக்கை வேண்டும்; இவை இரண்டிற்கும் மேலாக நம்மைப்பற்றி ஓர் உயர்ந்த பாவனை வேண்டும். நாம் வெறும் உடம்பு அல்ல, மனம் அல்ல; இவற்றைக் கடந்த ஓர் ஆன்மா என்ற உணர்வு வேண்டும். அப்போது மட்டுமே ஆன்ம வடிவான இறைவனுடன் நாம் உறவு கொண்டாட முடியும்.

இவ்வளவு மட்டுமல்ல. நமக்கும் நமது இஷ்ட தெய்வத்திற்கும் குணத்தளவில் ஒற்றுமை வேண்டும். உதாரணமாக சிவனை வழிபடுபவனிடம் சிவ அம்சம் வேண்டும். விஷ்ணுவை வழிபடுபவனிடம் விஷ்ணு அம்சம் வேண்டும். தேவியை வழிபடுபவனிடம் தேவியின் அம்சம் வேண்டும்.

பூஜையின் நியதிகள்

இந்துமதத்தில் பின்பற்றப்படுகின்ற பூஜைமுறை முக்கியமான மூன்று தத்துவங்களின் அடிப்படையில் செயல்படுகிறது—

1. மனிதன் தெய்வீகமானவன். தெய்வீகமான ஒருவனே தெய்வத்தைப் பூஜிக்க முடியும். ஒரு நாய் மனிதனிடம் காட்டும் அன்பை, மனிதன் மனிதனிடம் காட்டும் அன்புடன் ஒப்பிட முடியாது. அதுபோலவே நாம் மனித நிலையில் இறைவனை நேசிக்க முடியாது; நாமும் இறை நிலையில் இருந்துதான் இறைவனை நேசிக்க முடியும்; தெய்வமாகியே தெய்வத்தைப் பூஜை செய்ய முடியும். எனவே பூஜை செய்கின்ற ஒருவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்வது மிகவும் முக்கியமானது. தன்னைத் தானே உயர்த்தி, தெய்வமாகி,

அந்த நிலையில் அன்பு செய்யும்போது தான் அது உண்மையான பக்தியாகிறது.

'தெய்வம் என்னிலிருந்து வேறு பட்டவர், நான் தெய்வத்திலிருந்து வேறு பட்டவன் என்று நினைப்பவன் உண்மை அறியாதவன். மனிதனுக்கு மிருகங்கள் போல அவன் தேவர்களுக்கு மிருகமாக ஆகிறான். பல மிருகங்கள் ஒரு மனித னுக்குச் சேவை செய்வதுபோல் அவன் தேவர்களுக்குச் சேவை செய்கிறான்' என்று பிருஹதாரண்யக உபநிஷதம் *(1.4.10)* கூறுகிறது. 'தெய்வமாகி அவன் தெய்வத் தில் ஒன்றுகிறான்' என்று அதே உபநிஷதம் *(4.1.2–7)* மேலும் கூறுகிறது. இந்த உண்மையை வற்புறுத்துவதுபோல் இதே வாக்கியம் ஆறுமுறை அந்த உபநிஷதத்தில் வருகிறது. அதாவது தெய்வ நிலைக்குத் தன்னை உயர்த்தாமல் ஒருவன் செய்கின்ற பூஜை வெறும் கிரியை என்ற அளவிலேயே நிற்கும்; இறைவனுக்கும் நமக்கும் இடை யில் ஓர் உறவை ஏற்படுத்துகின்ற பாலமாக அமையாது.

2. தெய்வீகத்தைப் பெறுவது எப்படி? இதற்கான விடையே பூஜையின் இரண்டாவது அடிப்படை நியதியாக

அமைகிறது. 'எப்படி நினைக்கிறானோ அப்படி ஆகிறான்' என்கிறது சாந்தோக்கிய உபநிஷதம் *(3.14.1)*. ஒரு லட்சியத்தை எடுத்துக்கொண்டு தீவிரமாக பாடு பட்டால் அதனை அடைவது உறுதி. நாம் தெய்வீகமானவர்கள் என்பதைத் தொடர்ந்து நினைப்பதால் படிப்படியாக நாம் தெய்வீக மானவர்கள் ஆகிறோம். ஒரு தெய்வத்தைத் தொடர்ந்து தியானிக்கும்போது அந்த தெய்வத்தின் குணங்கள் நமக்கும் வருகிறது.

நினைப்பது, தியானிப்பது என்றெல் லாம் இங்கே கூறப்பட்டது வெறுமனே ஒரு படத்தையோ உருவத்தையோ எந்த உணர்ச்சியும் இன்றி பார்த்துக்கொண் டிருப்பதோ அல்லது பகல்கனவு காண்பதோ அல்ல. அதன் பெயர் தியானமும் அல்ல,[1] அது நமது வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரப்போவதும் இல்லை. இங்கே நாம் கூறுவது நமது ஆளுமையையே மாற்றி அமைக்கவல்ல ஆழ்ந்த, ஈடுபாட்டுடன் கூடிய சிந்தனை ஆகும். பூஜை போன்ற கிரியைகளில் முதலில் செய்யப்படுகின்ற

---

1. தியானம் பற்றி விரிவாக அறிய இதே நூலாசிரியரின் 'தியானம்' (சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்து வெளியீடு) என்ற நூலைப் பார்க்கவும்.

சங்கல்பம், பூத சுத்தி போன்றவை இத்தகைய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டவை.

3. தெய்வத்தை எழுந்தருளச் செய்வதற்கான ஆற்றல். தூய, பக்திமிக்க உள்ளங்களின் அழைப்பை இறைவன் கேட்கிறார் என்ற கருத்து வேதகாலத்திலிருந்தே நம்மிடம் நிலைபெற்றிருக்கின்ற ஒன்றாகும். புனிதப்படுத்தப்பட்ட ஒரு விக்கிரகத்தில் அல்லது ஒரு படத்தில் தெய்வத்தை எழுந்தருளச் செய்ய முடியும் என்ற கருத்து இதிலிருந்தே வந்தது.

பூஜைக் கிரியை

வேத காலங்களில் பிரார்த்தனைகளின் மூலமும் வேள்விகள்மூலமும் தெய்வத்துடன் தொடர்பு கொண்டனர். பின்னாளில் அது பூஜையாக உருவெடுத்து வளரத் தொடங்கியது. பல்வேறு பூஜை முறைகளும் அதற்குரிய சடங்குகளும் கிரியைகளும் உருவாயின. இவற்றை எல்லாம் விரிவாகக் கூறுகின்ற சாஸ்திரங்களே ஆகமங்கள். சைவம், சாக்தம், வைணவம் போன்ற முக்கிய நெறிகளுக்கு எல்லாம் தனித்தனியாக ஆகமங்கள் உள்ளன. பூஜை முறைகள் இடத்திற்கு இடம்

மாறுபட்டாலும் பொதுவாக சில அடிப்படைகளைக் கொண்டவையாக உள்ளன.

பொதுவாக தினசரி பூஜையில் ஆறு படிகள் உள்ளன— ஆயத்தம் (பூர்வாங்கம்), தூய்மைப்படுத்தல் (சுத்தி), தன்னை தெய்வீகமாக்குதல் (பூத சுத்தி), தெய்வத்தை எழுந்தருளச் செய்தல் (ஆவாஹனம்), சேவை (உபசாரம்), நிறைவு (புஷ்பாஞ்ஜலி).

1. ஆயத்தம்

இறைவன் புனிதமே உருவானவர். எனவே அவரைப் பூஜிப்பதற்கு நாம் பயன்படுத்துகின்ற எல்லாமே புனிதமாக இருப்பது அவசியம். எனவே மந்திரங்கள் மூலம் பூஜைக்குரிய பொருட்கள் புனிதப் படுத்தப்படுகின்றன; அங்கே உறைகின்ற தீய சக்திகள் விரட்டப்படுகின்றன.

இஷ்ட தெய்வத்தின் படம் அல்லது திருவுருவம் உட்பட அனைத்தையும் முதலில் தூய்மை செய்ய வேண்டும். பூஜை அறை, பூஜைக்குரிய சாமான்கள் எல்லா வற்றையும் தூய்மைப்படுத்தி, மலர் சந்தனம் தூபம் தீபம் போன்றவற்றை உரிய

இடங்களில் வைக்க வேண்டும். பொதுவாக கிழக்கு அல்லது வடக்கு பார்த்தவாறு அமர்ந்து பூஜை செய்வது நல்லது. அதற்கேற்ப ஆசனத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

முதல் கிரியை ஆசமனம். வாயைப் புனிதப்படுத்துதல் என்பது இதன் பொருள். இதைச் செய்யாமல் எந்த மந்திரங்களையும் உச்சரிக்கக் கூடாது.

அடுத்தது சங்கல்பம். அன்றாட வாழ்க்கையில் நாம் செய்கின்ற தவறுகளும் சந்திக்கின்ற தோல்விகளும் ஏராளம். இதற்கு பொதுவாக மூன்று காரணங்களைச் சொல்லலாம்—1. தன்னறிவு (self-awareness) இல்லாமல் ஒரு செயலைச் செய்வது; 2. ஒரு லட்சியத்திற்காக அல்லாமல் ஏனோதானோ என்று செய்வது; 3. திட சங்கல்பம் (will) இல்லாமல் வேலை செய்வது. இந்த மூன்றிலும் முக்கியமானது திட சங்கல்பம். இது மற்ற இரண்டிற்கும் அடிப்படை.

எனவே ஒரு பூஜை செய்யும்போது அதன் நோக்கம் என்ன என்பதை சங்கல்பித்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக சாதாரண வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பதற்காகவா அல்லது முக்தியை நாடி அந்த

பூஜை செய்யப்படுகிறதா என்பதை உறுதி படுத்துவதற்கு உரியது இந்தக் கிரியை.

தன்னறிவு இல்லாமலும், ஏனோ தானோ என்றும் பூஜை செய்யாமலிருப் பதற்கு இந்த சங்கல்பம் உதவுகிறது.

2. தூய்மைப்படுத்தல்

அடுத்து வருவது பூஜைக்குரிய நீரைப் புனிதப்படுத்துவது. கங்கை, யமுனை போன்ற ஏழு தீர்த்தங்களும் மந்திரங்கள் மூலம் அழைக்கப்பட்டு, பூஜைக்குரிய நீரில் சங்கமிக்குமாறு பிரார்த்திக்கப் படுகின்றன. பூஜை முழுவதும் இந்த நீரே பயன்படுத்தப்படுகிறது.

பிறகு, இடையூறுகள் எதுவும் இல்லாமல் பூஜை நிகழ அதற்குரிய தெய்வங்களிடமும் குருமார்களிடமும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

3. தன்னை தெய்வீகமாக்குதல்

பூஜைக்குரிய பொருட்களைப் புனிதப் படுத்துவதுபோலவே தன்னையும் தெய்வீக மாக்கிக்கொள்ள வேண்டும். தன்னில் உள்ள பாவங்கள் அனைத்தையும் ஒரு பாவ புருஷனாக முதலில் சங்கல்பித்துக்கொள்ள வேண்டும். பிறகு மந்திரங்கள்மூலம்

அவனை எரிக்க வேண்டும். அடுத்து, தான் ஒரு புனிதமான, சுயஒளிமிக்க ஆன்மா என்பதைத் திடமாக்கிக்கொள்ள வேண்டும். இந்தக் கிரியை மூன்று படிகளாக செய்யப் படுகிறது.

முதலில் பிராணாயாமம். இதன்மூலம் நுண்ணுடல் புனிதமாக்கப்படுகிறது.

அடுத்துவருவது பூத சுத்தி எனப்படும் முக்கியமான கிரியை ஆகும். மூலாதாரத்தில் உறங்குகின்ற குண்டலினி சக்தி விழித்தெழுந்து தலையில் உள்ள சகஸ்ராரத்திற்குச் சென்று அங்கே உள்ள ஒளிமயமான பரமாத்மாவுடன் இணைவதாக இங்கே சங்கல்பிக்கப்படுகிறது. அதன் பிறகு, பாவ உடல் அந்தத் தெய்வீக ஒளியில் எரிந்துவிடுவதாக நினைக்க வேண்டும். பிறகு தனக்கு பாவங்கள் அற்ற ஒளிமயமான ஒரு தெய்வீக உடல் கிடைப்பதாகவும் எண்ணிக்கொள்ள வேண்டும்.

பூத சுத்திக்குப்பிறகு, அதாவது புதிய தெய்வீக உடம்பு கிடைத்தபிறகு அந்த உடம்புடன் இதயத்தில் இஷ்ட தெய்வத்தின் சான்னித்தியத்தை நிரப்ப வேண்டும்.

உடம்பில் தெய்வீக ஆற்றலை நிறைத்தல்

பூஜை செய்பவனுக்கு இப்போது தெய்வீக உடம்பு கிடைத்துவிட்டது, இதயத்தில் தெய்வீக சான்னித்தியத்தை அவன் உணர்கிறான். இனி, அவன் தனது எல்லா அங்கங்களிலும் தெய்வீக ஆற்றலை நிறைக்க வேண்டும். இது நியாசம் எனப்படுகிறது. சில பீஜ மந்திரங்களை உச்சரித்து உடம்பின் பல்வேறு அங்கங்களைத் தொடுகிறான். இதன் மூலம் உடம்பின் எல்லா அங்கங்களிலும் தெய்வீக ஆற்றல் நிறைக்கப் படுகிறது.

4. இஷ்டதெய்வத்தை எழுந்தருளச் செய்தல்

இவ்வாறு தெய்வீக ஆற்றல் நிறைந்த அங்கங்களுடன்கூடிய உடம்பு இஷ்ட தெய்வத்தை அழைக்க வல்லதாகிறது. பொதுவாக திருவுருவம், சிவலிங்கம், சாளக்கிராமம், கும்பம், படம் போன்றவை பூஜைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் இஷ்டதெய்வம் எழுந்தருள்வதற்காகச் செய்யப்படுகின்ற கிரியை ஆவாஹனம் எனப்படுகிறது.

இதயத்தில் எழுந்தருளியுள்ள இஷ்ட தெய்வம் மூச்சுவழியாக வெளிவந்து கையிலுள்ள மலரில் அமர்வதாகக் கருத வேண்டும். பிறகு அந்த மலரை திருவுருவத் தின்மீது வைக்கும்போது இஷ்ட தெய்வம் அங்கே எழுந்தருள்வதாக நினைக்க வேண்டும். பிறகு அந்தத் திருவுருவிற்கு பல்வேறு முத்திரைகள்மூலம் ஆற்றல் அளிக்கப்படுகிறது. இந்தக் கிரியை பிராண பிரதிஷ்டை எனப்படுகிறது.

5. சேவை

திருவுருவில் எழுந்தருளிய இஷ்ட தெய்வத்திற்குக் கைகால் அலம்ப தண்ணீர் கொடுத்தல், அபிஷேகங்கள் செய்தல், நைவேத்தியம் போன்ற பல்வேறு உபசாரங்கள் அல்லது சேவைகள் செய்யப் படுகின்றன. பெருமைக்குரிய விருந்தாளி ஒருவர் வீட்டிற்கு வருவதுபோல் கருதப்பட்டு இந்த உபசாரங்கள் செய்யப்படுகின்றன.

6. நிறைவுக் கிரியைகள்

எல்லா பூஜையும் நிறைவுற்ற பிறகு கைநிறைய மலர்களை இஷ்ட தெய்வத்தின் திருவடிகளில் சமர்ப்பித்து பூஜை நிறைவு செய்யப்படுகிறது.

துர்க்கா பூஜை போன்ற விசேஷ பூஜைகளில் பூஜிக்கப்பட்ட தெய்வம் அவரது இருப்பிடத்திற்கு எழுந்தருளுமாறு பிரார்த்திக்கப்படுகிறது.

பிரசாதம்

பூஜைகளில் அபிஷேகம் செய்யப் பட்டவை, நைவேத்தியம் செய்யப் பட்டவை எல்லாம் பிரசாதமாக கடைசி யில் வழங்கப்படுகிறது. பிரசாதம் மனத்தைத் தூய்மைப்படுத்துவதாக கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி, பிரசாதம் என்ற சம்ஸ்கிருத வார்த்தை அருள் என்று பொருள்படுகிறது. எனவே பிரசாதம் ஏற்றுக்கொள்வது என்பது இறையருளைப் பெறுவது என்பதாகும்.

இந்துமதத்தில் பிரசாதத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒரு தெய்வத்திற்கு நைவேத்தியம் செய்யும்போது அந்த உணவில் நுண்மை யான சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. 'தேவர்கள் நம்மைப்போல் உண்பதோ பருகுவதோ இல்லை. அவர்கள் உணவைப் பார்ப்பதன்மூலமே திருப்தி பெறுகிறார்கள்' என்று சாந்தோக்கிய உபநிஷதம்

கூறுகிறது.[1] அன்னை ஸ்ரீசாரதாதேவியின் அனுபவ மொழிகள் இதனை நிரூபிப்பதாக உள்ளது—

'தாம் படைக்கின்ற உணவை குருதேவர் மூன்று வகையாக ஏற்றுக்கொள்வதாக அன்னை கூறியுள்ளார்— உயிருணர்வுடன் குருதேவரே வந்து அமர்ந்து உணவைச் சாப்பிடுவார், அல்லது அவரது நெற்றியிலிருந்து ஓர் ஒளி புறப்பட்டு வந்து உணவுப் பொருட்களைத் தொடும், அல்லது உணவைத் தொடாமலே தாம் அவற்றை ஏற்றுக் கொண்டதாக அடையாளம் காட்டுவார். இவற்றுள் ஏதாவது ஒரு வழியில் குருதேவர் உணவை ஏற்றுக் கொள்ளும்வரை அன்னை காத்திருப்பார். குருதேவர் சாப்பிடவில்லை என்றால் தாமும் சாப்பிட மாட்டார்.'[2]

ஹோமம்

விசேஷ பூஜைகளில் எல்லாம் பொதுவாக ஹோமம் செய்யப்படுகிறது.

---

1. ந வை தேவா அச்னந்தி ந பிபந்தி ஏததேவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி |

—சாந்தோக்கிய உபநிஷதம், 3.6.1-3.9.1

2. அன்னை ஸ்ரீசாரதா தேவி (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து வெளியீடு) பக். 354.

பூஜையின் நிறைவாக இது கொள்ளப் படுகிறது. வீடுகளில் தினசரி செய்யப் படும் பூஜைகளில் ஹோமம் பொதுவாக இடம் பெறுவதில்லை. ஆயினும் அக்னி ஹோத்ரம் போன்ற வடிவங் களில் சில இடங்களில் அது இன்றும் நிலவுகிறது.

'பல்வேறு ஆஹுதிகளை அக்கினி யில் சமர்ப்பிப்பது ஹோமம் ஆகும்.'[1] கணபதி, சிவன், விஷ்ணு, தேவி என்று ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி யாக ஹோமம் உள்ளது.

ஆராத்ரிகம்

இது பொதுவாக ஆரதி என்று அழைக்கப்படுகிறது. தூபம், தீபம் போன்றவற்றை தெய்வத்தின் முன்னால் காண்பிக்கின்ற கிரியை இது. இந்த வேளையில் தெய்வத்தின் திருவுருவில் ஒரு விசேஷ சான்னித்தியம் வெளிப் படுவதாக கூறப்படுகிறது. பொதுவாக ஆரதி வேளைகளில் மணி, சங்கு,

---

1. *இஷ்டிர் யாக:। ஸ ஏவாஸேசனாதிகோ ஹோம:।*

—*மீமாம்ஸ சூத்திரம், 6.8.7.*

சேகண்டி போன்றவைகளால் நாதம் எழுப்பப்படுகிறது. இதனால் அந்த வேளையில் மனம் ஒருமுகப்பட்டு தெய்வத்தை நினைக்க ஏதுவாகிறது.

பூஜை பொதுவாக ஒரு தனி நபர் செய்வதாகும். அதன் நிறைவாகிய இந்த ஆரதியில் எல்லோரும் பங்கெடுக்கின்றனர். இதனுடன் பூஜை நிறைவுறுகிறது.

பூஜைக் கிரியையின் இந்த ஆறு படிகளையும் ஒருமுறை தொடர்ச்சியாக நினைத்துப் பார்த்தால் பூஜை எவ்வாறு செயல்படுகிறது என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். முதலில் நம்மைத் தூய்மையாக்கினோம் (1,2) பிறகு நம்மைத் தெய்வீகமானவர்கள் ஆக்கினோம் (3), அதன்பிறகு தெய்வத்தை எழுந்தருளச் செய்து அவருக்கான உபசாரங்களைச் செய்தோம் (4-6). நாம் தெய்வீகமாவது என்ற இந்த பாவனையில், அதாவது இந்தக் கருத்தில் எவ்வளவு ஆழ்ந்து நாம் ஈடுபடுகிறோமோ அந்த அளவுக்கு நாம் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவோம்; இறைவனை நெருங்குவோம். இவ்வாறு பூஜை ஒரு மனிதனை இறைவனின் தரிசனத்தை அளிக்கிறது.

பூஜையும் சமுதாயமும்

பூஜை தனி மனிதனை எவ்வாறு இறைக் காட்சிக்குத் தகுதி உடையவனாக்கு கிறது என்பதை இதுவரை கண்டோம். அத்துடன் சமுதாயத்திலும் பெரிய விளைவு களை ஏற்படுத்துவது பூஜை. ஏனெனில் அது மக்களை ஒருங்கிணைக்கின்ற ஒரு சமுதாய நிகழ்ச்சியாகவும் உள்ளது. சரஸ்வதி பூஜை, விநாயக சதுர்த்தி போன்ற விசேஷ பூஜை நாட்கள் பொதுவாக பெரிய திருவிழாவாகவே கொண்டாடப்படுகிறது. இதில் கலந்து கொள்வதற்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகின்றனர். இதன்மூலம் கருத்து, கலாச்சாரம் போன்றவற்றின் பகிர்விற்கும் வளர்ச்சிக்கும் வழி உண்டாகிறது.

பல்வேறு தெய்வங்களுக்கு பல் வேறு விதமான பூஜைகள் நடைபெறு கின்றன, இந்தப் பூஜைகளுக்கு இடையே பெரிய வேறுபாடுகளும் இருக்கும். எனவே இது மக்களிடையே ஒரு பிரிவுணர்ச்சியைத் தோற்றுவிக்காதா என்ற கேள்வி எழலாம். இதற்கு, ஆம் என்று பதில் இருந்தால்கூட அதையும் மீறிய நன்மை உள்ளது. ஏனெனில்

மனிதனுக்குப் பாதுகாப்பு உணர்ச்சியை அளிப்பதில் பூஜை பெரும் பங்கு ஆற்றுகிறது. உதாரணமாக, பரிட்சை நெருங்குகின்ற நாட்களில் பிள்ளையார் கோயில் அருகே கூட்டம் அலைமோதுவதைக் காணலாம். பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் அது கட்டாயம் வெற்றியைத் தரும் என்ற உணர்ச்சி ஒருவனைச் சிறப்பாக தேர்வு எழுத வைத்துவிடுகிறது. இது போலவே மற்ற நிகழ்ச்சிகளிலும் பூஜை செய்தபிறகு ஒன்றைத் தொடங்குவதால் நன்மை விளையும் என்ற நம்பிக்கை நம்மை ஆக்கபூர்வமான வழிகளில் செல்ல வைக்கிறது.

பூஜையின் மற்றொரு பரிமாணம்

இறைவனை எங்கும் நிறைந்தவராகக் காண்கிறது இந்து மதம். 'இறைவன் ஆயிரமாயிரம் தலைகள் கொண்டவர், ஆயிரமாயிரம் பாதங்கள் கொண்டவர்'[1] என்கிறது புருஷ ஸூக்தம். 'எங்கும் கைகள், எங்கும் பாதங்கள், எங்கும் கண்கள், தலைகள், எங்கும் வாய்கள், எங்கும் காதுகள்

---

1. ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ர பாத் ।

கொண்ட இறைவன் எங்கும் நிறைந் துள்ளார்' என்கிறது பகவத்கீதை (13.13). அந்த இறைவனை ஓர் உருவத்தில் அல்லது படத்தில் எழுந்தருளச் செய்து பூஜை செய்வதுபற்றி இதுவரை கண்டோம். ஆனால் எங்கும் நிறைந்த பரம்பொருளை அந்தப் பரிமாணத்திலேயே வழிபடுவது இந்து மதத்தின் சிறப்பு அம்சங் களுள் ஒன்றாகும்.

பூஜையின் ஒன்பது அம்சங்கள்

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:
ஸ்மரணம் பாதஸேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம்
ஆத்மநிவேதனம் ||[1]

இறைவனை பக்தி செய்யும் வழியில் ஒன்பது படிகளை வைக்கிறார் பிரகலாதர். அவை இறைவனின் பெருமைகளைக் கேட்பது (சிரவணம்), அவரது புகழைப் பாடுவது (கீர்த்தனம்), அவரைச் சிந்திப்பது (ஸ்மரணம்), அவரது திருப்பாதங்களுக்குச் சேவை செய்வது (பாத ஸேவனம்), மலர்களால் அர்ச்சிப்பது (அர்ச்சனம்),

---

1. ஸ்ரீமத் பாகவதம், 7.5.23.

நமஸ்கரிப்பது (வந்தனம்), சேவகனாக, தோழனாக, குழந்தையாக அவருடன் ஓர் உறவுமுறையை ஏற்படுத்திக்கொண்டு அவரை நாடுவது (தாஸ்யம், ஸக்யம்), தன்னையே அவருக்குச்சமர்ப்பிப்பது (ஆத்ம நிவேதனம்).

இதில் பாத ஸேவனம் என்பதை இரண்டு பரிமாணங்களிலும் பார்ப்பது இன்றியமையாதது. ஒரு கோயிலினுள் உறைகின்ற விக்கிரகத்திற்குப் பாதங் களைக் காண்கிறோம். மலர்களால் அவற்றை அர்ச்சனை செய்யவும் வழிபடவும் முடியும். ஆனால் எங்கும் நிறைந்துள்ள பாதங்களை வழிபடுவதும் அர்ச்சனை செய்வதும் எப்படி?

இதற்கான வழியை நாம் கீதையில் காண்கிறோம். 'இந்த உலகனைத்தும் யாரிலிருந்து தோன்றியதோ, யார் இந்த உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறாரோ அந்த இறைவனைச் செயல்கள்மூலம் வழிபட்டு அதனால் நிறைநிலை அடை கிறான்' என்கிறது பகவத்கீதை (18.46). கீதை போன்ற பல சாஸ்திரங்களில் இந்தக் கருத்தை நாம் கண்டாலும் இதனைச் சமீபகாலத்தில் பிரபலப்

படுத்திய பெருமை சுவாமி விவேகானந்தரைச் சாரும்.[1]

செயலே பூஜை

சாதாரணமாக நாம் செய்கின்ற செயல்கள் எப்போது பூஜையாக மாறுகின்றன? இதற்கு முதல் தேவை செயல் புரிபவனின் கண்ணோட்டத்தில் ஒரு மாற்றம். இறைவன் தன் படைப்பினுள் ஊடுருவி இருக்கிறார், எங்கும் நிறைந்து எல்லா பொருட்களிலும் விளங்குகிறார் என்ற உணர்வு அவனுக்கு வேண்டும். 'இறைவனின் ஒளியாலேயே எல்லாம் ஒளிர்கின்றன' என்று முண்டக உபநிஷதம் (2.2.10) கூறுகிறது. இறைவனின் ஒளியாலேயே எல்லாம் ஒளிர்வது உண்மையாகும்போது இந்தப் பிரபஞ்சமே நமது வழிபாட்டிற்கு உரியதாகிறது. ஆனால் 'பகவானே எல்லாமாகியுள்ளார் என்பது உண்மைதான், ஆனால் சில இடங்களில் சக்தி அதிகமாக வெளிப்படுகிறது, சில இடங்களில் குறைவாக

---

1. இந்தக் கருத்துபற்றி விரிவாக அறிய இதே நூலாசிரியரின் 'எது கர்மயோகம்?' என்ற நூலைப் பார்க்கவும்.

வெளிப்படுகிறது' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சுட்டிக் காட்டுவதை மனத்தில் கொள்வது இன்றியமையாதது. இதனால்தான் இந்து மதம் சில இடங்களை மட்டும் வழி பாட்டிற்கு உரியதாக வைத்தது; சில மலைகள், சில நதிகள், சில மரங்கள், சில மிருகங்கள், சில பறவைகள், அது போலவே சில மனிதர்கள் அதாவது மகான்களை மட்டும் வழிபாட்டிற்கு உரியவர்களாக வைத்தது.

இதையே சுவாமி விவேகானந்தர் சற்று மாற்றி அமைத்தார். ஏழைகளுக்கு, தாழ்த்தப் பட்டவர்களுக்கு, திக்கற்றவர்களுக்குச் சேவை செய் என்றார் அவர்— அவர்களிடம் இறைவனின் வெளிப்பாடு அதிகம் என்பதற் காக அல்ல, அவர்களின் தேவை பெரிது என்பதற்காக; அது மிகவும் சுயநல மற்ற சேவை என்பதற்காக. 'சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி, அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.... சுயநலம் கொண்டவன் எல்லா கோயில்களையும் வழிபட்டிருந் தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தை யும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப் போல் தன் உடம்பு முழுவதும் சமயச்

சின்னங்களைத் தீட்டிக்கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மீக முன்னேற்றத்திற்கு முக்கியமான தடைக்கல்லாக இருப்பது சுயநலம். கோடிக்கணக்கான மக்கள் வறுமையிலும் அறியாமையிலும் வாடிக்கொண்டிருக்கும் போது அவர்களைப் புறக்கணிப்பது சுயநலமே ஆகும். இதனால் கோயில் பூஜைகளும் சடங்குகளும் எல்லாம் தவறு, வீண் என்பது பொருள் அல்ல. சுவாமி விவேகானந்தர் அப்படி ஒருபோதும் குறிப்பிடவும் இல்லை. தூய்மையும் சுயநலமின்மையுமே ஆன்மீக வாழ்க்கையின் அஸ்திவாரங்கள்; ஏதாவது ஒரு விதத்தில் சமுதாய சேவை செய்யாமல் இந்தப் பண்புகளை அடைவது கடினம் என்பதையே அவர் சுட்டிக்காட்டுகிறார். பூஜை அல்லது வழிபாடு என்பதை ஒரு விரிந்த கண்ணோட்டத்தில் பார்க்குமாறு அவர் நம்மைத் தூண்டுகிறார்.

---

1. ஞான தீபம், (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து வெளியீடு) 5.47.

ஏது பூஜை?

இந்து மதத்தில் நான்குவிதமான பூஜைகள் கூறப்படுகின்றன—

1. புற பூஜை: பொதுவாக வீடுகளிலும் கோயில்களிலும் செய்கின்ற பூஜை. பல்வேறு மந்திரங்களுடனும் கிரியை களுடனும் கூடியது இது.

2. மானசீக பூஜை: i. புறத்தில் செய் கின்ற அத்தனை கிரியைகளையும் உபசாரங் களையும் மனத்தளவில் செய்வது. ii. இஷ்ட தெய்வ மந்திரத்தை ஜபிப்பதும், இஷ்ட தெய்வத்தின் திருவுருவைச் சிந்திப்பதும்.

3. ஸ்தோத்ரம்: துதிகள், பஜனை போன்றவற்றின்மூலம் தெய்வத்தை வழிபடுவது.

4. கைங்கரியம்: i. கோயில்களிலும் மற்ற இடங்களிலும் திருத்தொண்டு செய்தல். ii. செய்கின்ற வேலைகளை எல்லாம் இறைவனுக்குச் சேவையாகச் செய்வது.

எனவே பூஜை என்று சொல்லும்போது சில கிரியைகள் மட்டும் அல்ல; இறை வனுக்கு நம் அனைத்தையும் கொடுக்கின்ற நிலையில் நம்மை வைத்திருக்கின்ற ஒரு மனப் பக்குவம் என்று கொள்வது இன்றியமையாதது.

இங்கே இன்னொரு கருத்தையும் நினைவில்கொள்ள வேண்டும். ஆன்மீக வாழ்க்கை என்பது நமது முழு வாழ்க்கையையும் மாற்றி அமைப்பது ஆகும். பூஜையை சில கிரியைகள் என்னும் சாதாரணக் கண்ணோட்டத்தில் பார்த்தால், அதன்மூலம் நமது வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறை வாகவே உள்ளன. சாதாரண வேலைகளை யும் பூஜை என்ற கண்ணோட்டத்தில் பார்த்து வாழ்க்கையையே ஒரு பூஜையாக மாற்றும் போதுதான் நமது வாழ்க்கை ஓர் ஆன்மீக வாழ்க்கையாக மாறி அமைய முடியம்.

பூஜையின் முக்கிய நோக்கம் அகங் காரத்தைக் குறைப்பதும், இறைவனுடன் நமக்கு ஒரு மாறாத உறவை ஏற்படுத்துவதும் ஆகும். அதை மட்டும் அடைந்துவிட்டால் வாழ்க்கையே ஒரு பூஜையாக மாறிவிடும்.

ISBN 81-7120-878-9
9 788171 208784



புத்தகங்கள் வெப்தளம்மூலம் ஆர்டர் செய்ய
www.sriramakrishnamath.org

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை 4
email : srkmath@vsnl.com

Edhu Pujai? (Tamil) Rs. 8.00

